# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்
வணிக மாத இதழ்

Volume: 14 | Issue : 08 | NOVEMBER 2025 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE











## SCC's Monthly Program on Role of Artificial Intelligenc in Digital Marketing










அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


GSTIN: 33ALZPD4776G1ZO
மல்லிகை
The Mart
GROCERY / TOYS / STATIONERY / GIFTS
Online Delivery : 9345910000
No. 198-A, South Masi Street, Madurai - 625001.


Ananda Nilayam
Mayflower
The Banquet Hall A/C
Location - Google Map
Marriage Function
Betrothal
Naming Ceremony
Birthday Party
Puberty
Get-to-gether
Hall available for all type of functions
Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001
For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

## அஸ்கிதெங்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

நவம்பர் மாதாந்திர கூட்டத்தில் டிஜிட்டல் மார்கெட்டிங்-ல் AI-ன் பயன்பாடு பற்றிய தலைப்பிலான சேம்பர்-ன் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில், உறுப்பினர்களில் பலர் ஆர்வத்துடன் பங்கேற்றது மகிழ்ச்சியளிக்கிறது. AI பற்றிய விழிப்புணர்வும், தாக்கமும் அனைவரிடத்திலும் சென்றடைந்துள்ளது என்பதற்கு, நடைபெற்ற நிகழ்ச்சியில் மிகுந்த அளவில் பங்கேற்ற அங்கத்தினர்களே சாட்சி. நாம் அனைவரும், அடுத்த கட்டத்தை நோக்கி நகர இவ்வளவு ஆர்வத்துடன் இருப்பது பெரிதல்ல, அதனை கவனத்துடன் கையாள வேண்டும் என்பது மிக முக்கியம்.

சிறப்பு விருந்தினர் அருமையாக கூறியதாவது: கால்குலேட்டர் வந்தது, சுயமாக விரைந்து கணக்கு போடுவதை மறந்தோம், கம்ப்யூட்டர் வந்ததும் எழுதுவதை இன்றைய தலைமுறை மறந்து கொண்டிருக்கிறது, அதுபோல, தற்போது ஏஐ வருகிறது, வருங்காலத்தில், மனிதனுக்கே உரிய பிரதான அறிவை நாம் இழந்து விடக்கூடாது. போட்டியுலகில், விரைந்து செயல்படவே ஏஐ. அதனை நம் தொழிலில் ஓர் எல்லையுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். முக்கியமாக, பொது மக்கள், உடல் மற்றும் மனம் சம்பந்தமாக பிரச்சனைகளுக்கு இதனை கவனத்துடன் அணுக வேண்டும்.

ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதில், நிகழ்ச்சிக்குழுவும், உணவுக்குழுவும் அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்களுடைய பணியை செவ்வனே செய்வதால்தான் மாதாந்திர கூட்டங்கள் மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. சேம்பர், அவர்களின் உன்னத உழைப்பப் பாராட்டி மகிழ்கிறது.

அதேபோல, வாழ்த்துக்குழு, அதிகாலையில் நாள் தவறாமல். சேம்பர்-ன் சேவல் போல் ஏவல் புரிகிறது. அவர்களுக்கும் நம் வணக்கங்கள் உரித்தாகுக.

சிறப்பு அழைப்பாளர்கள் தேனீக்கள் போல செயல்படுவதால், நிகழ்ச்சிகள் இனிக்கின்றன.

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கிற தேர்தலில் சரியான நபரை தேர்ந்தெடுக்க இப்போதிருந்தே பொதுமக்களாகிய நாம் அனைவரும் தயார்படுத்திக்கொண்டு, விழிப்புணர்வுடன் செயல்படவும் வேண்டும். தேர்தல் வந்தால், அரசியல் கட்சிகள் தான் விழிப்புடனும், துடிப்புடன் செயல்பட வேண்டும் என்பதில்லை. சமூகமும் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

நன்றி

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
# BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**23.10.2025** – மதுரையில், மத்திய சரக்கு மற்றும் சேவை வரித் தொடர்பான குறைதீர்க்கும் கூட்டத்திற்கு சேம்பர் சார்பாக அரசு தொடர்புக் குழு சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் கலந்து கொண்டு ஆணையிரிடம் மனு அளித்தார்.

**29.10.2025** – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 7வது செயற்குழு கூட்டம் சேம்பர் அரங்கில் மாலை வேளையில் நடைபெற்றது. சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர். சேம்பர் நடத்திய ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக கண்காட்சிக்குப் பணியாற்றிய குழு உறுப்பினர்கள் அனைவரையும் கண்காட்சி சேர்மன் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் கௌரவித்தார். தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினார்.

**04.11.2025** – டிஜிட்டல் மார்க்கெட்டிங்-ல் ஏஐ தொழில்நுட்பத்தின் பயன்பாடு பற்றி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக எலைசியம் குழும நிறுவனர் திரு. சுந்தரேஷ் காமராஜ் அவர்கள் பங்கேற்றார். கூட்டத்திற்கு ஆர்வத்துடன் திரளான அங்கத்தினர்கள் பங்கேற்றிருந்தனர். இந்த முக்கிய நிகழ்வில், கே.எல்.என். பொறியியற் கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அதோடு, தங்களின் முயற்சியில் உருவான தொழில்நுட்பத் தயாரிப்புகள் பற்றியும் பேசினர். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

**09.11.2025** – அன்று காலை நமது ஆயுட்கால உறுப்பினர் திரு. B.S. கார்த்திகேயன் அவர்களின் முயற்சியில், மதுரை வளர்நகர் பகுதியில் முதியோர் இல்ல துவக்க விழாவில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

**09.11.2025** – அன்று மாலை, சேம்பர்-ன் சிறப்பு அழைப்பாளர் திரு. T.G. சதீஷ் குமார் மற்றும் ப்ளாக் ஃபாரஸ்ட் திரு. B. ஆனந்த் இருவரின் மக்கட்செல்வங்கள் இனிய தம்பதிகளாய் இணையும் திருமண வரவேற்பு விழாவில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

நமது லாப் ஸமாச்சார் இதழ், இதுவரை இணைந்துள்ள நம் சேம்பரின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சரியாக சென்றடைந்து வருகிறது. தாங்கள் உறுப்பினராக இணைந்த போது சேம்பர் அலுவலகத்திற்கு அளித்த முகவரிக்கே அனுப்பப்படுகிறது. இடையில், இடமாற்றம் ஏற்பட்டவர்கள், சேம்பர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தினால் மட்டுமே சரியாக தங்கள் கைக்கு கிடைத்திடும். ஆகவே முகவரி மாற்றம் அல்லது அலைபேசி எண் மாற்றம் இருந்தால் உடனடியாக தெரியப்படுத்தக் கேட்டுக்கொள்கிறோம். சரியான முகவரியாக இருந்தாலும், சிலருக்கு இதழ் கைக்கு வருவதில்லை என்று கூறுகிறார்கள். இது தொடர்ந்து நடந்தால், சேம்பர் அலுவலகத்திற்குதெரிவிக்கவும். இதழ்குழுவினர் தபால் துறை அதிகாரியை சந்தித்து சீர்செய்ய உதவியாக இருக்கும். தங்கள் சரியான முகவரிக்கு தடையின்றி இதழ் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏஐ தொழில்நுட்பத்தின் தாக்கம் டிஜிட்டல் மார்க்கெட்டிங்-ஐ சமூக ஊடகங்களில் மாற்றியமைத்துள்ள என்பதை விளக்கும் கூட்டம் நம் சேம்பர்-ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது மிக அருமையாக இருந்தது. இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் தேவையான. பயனுள்ள நிகழ்ச்சி இது. பலர் ஆர்வத்துடன் பங்கேற்றது மகிழ்ச்சியளிக்கிறது.

நன்றி

### திருக்குறள்

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.**

**பொருள்:** உடல் வளர்ச்சிக்காக அறுசுவைகளுடன் உண்ணப்படுகிற உணவு ஒருமுறை உண்டது முற்றிலும் சீரணமாகிவிட்டதா என்பதைக் கவனித்து அடுத்த முறை உண்டால் நோய் உண்டாகாது. ஆகவே, மருந்தே வேண்டியிருக்காது.

அதிகாரம் 95 மருந்து(வைத்தியம்) அங்கவியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544



*Best Compliments from*

# BVK GROUP



**Bala V Kutti**
Founder & Chairman

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothan Building. 114, M G Rood, Nungambakkam, Chennai - 600 834.
No 603. Keshava - BKC, Mumbai - 400 051.

# டிஜிட்டல் மார்க்கெட்டிங்-ல் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள்




காலம் செல்லும் வேகத்தோடு நம் தொழிலையும் அதன் வேகத்தில் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தில், அதற்கு உதவியாக இருக்கும் தொழில்நுட்பத்தையும், அதனைக் கையாளும் யுக்திகளையும் அறிந்து கொள்வது கட்டாயமாகிவிட்டது.

இதனை கருத்தில் கொண்டு நமது சேம்பர், கடந்த 04.11.2025 அன்று மாலை ஸௌ. சேம்பர்-ல் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி டிஜிட்டல் மார்க்கெட்டிங் செய்வது பற்றிய கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. இதில் சிறப்பு விருந்தினராக எலைசியம் குழும நிறுவனர் திரு. சுந்தரேஷ் காமராஜ் அவர்கள் கலந்து கொண்டார்.

திரு. சுந்தரேஷ் காமராஜ் அவர்கள் தனது உரையில், மனித மூளைக்கு மாற்றாக செயல்படக்கூடியதும், துரிதமாக தகவல்களை திரட்டித்தருவதுமே தகவல் தொழில்நுட்பத்துறையின் அடுத்த வளர்ச்சியான ஏஐ என்று கூறப்படும் செயற்கை தொழில்நுட்பம். இது, நம் தொழிலை சரியான அணுகுமுறையில் முன்னோக்கி நகர்த்திக் கொண்டு செல்ல உதவுகிறது என்று ஏஐ – ன் நோக்கம் பற்றி விவரித்தார்.

நமது தொழிலில், எங்கெங்கு இந்த ஏஐ – ன் பயன்பாடு இடம்பெறுகிறது. எந்தெந்த மென்பொருள் காரணிகள் இதனை பயன்படுத்த உதவுகின்ற போன்ற தகவல்களோடு, மார்கெட்டிங் துறையில் இதன் பயன்கள் பற்றியும் விரிவாகப் பேசினார். அதற்கு பெரு நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தங்கள் நிறுவன வளர்ச்சிக்குப் எவ்வாறு ஏஐ-யை பயன்படுத்தி தொழிலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துகின்றனர், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது, விலை நிர்ணயிப்பது போன்றவைகளை மேற்கொள்கின்றனர் என்பது பற்றியும் அருமையாக கூறி நிறைவு செய்தார்.

கூட்டத்திற்கு ஏராளமான அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். K.L.N. பொறியியல் கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். மாணவர்கள் தங்கள் சந்தேகங்களையும் கேட்டறிந்தனர். அதோடு, தங்களின் தனித்திறனில் உருவாக்கிய ப்ராஜக்ட்கள் பற்றியும் தெரிவித்தனர்.

சிறப்பு விருந்தினர் அவர்களை ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள், நினைவுக் கேடயம் வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவித்தனர்.

நிறைவாக, பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# நிகழ்வுகள்



அக்டோபர் மாத லாப் ஸமாச்சார் இதழை சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் வெங்கடாதிரி கன்ஸ்ட்ரக்ஷன் திரு. K.V. விஜயகுமார் அவர்கள் வெளியீடு செய்கிறார். உடன், இதழ் குழுவினர் திரு. K.S. சிவக்குமார், திரு. K.K. ராம்குமார், துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன், இதழ் குழு உறுப்பினர் திரு. லகுடுவா பாஸ்கர், இணைச் செயலாளர் திரு. T.N. சூரியபிரகாஷ்



23.10.2025 அன்று நடைபெற்ற ஜிஎஸ்டி குறை தீர்க்கும் கூட்டத்தில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக, ஜிஎஸ்டி குழு சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் பங்கேற்று மனு அளித்தார். இந்த கூட்டம் ஆணையர் திரு. சோமேஷ் திவாரி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



ஸௌ. சேம்பர்-ன் 7வது செயற்குழு கூட்டம் கடந்த 29.10.2025 அன்று மாலை சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் தலைமைத்தாங்கினார். கூட்டத்தில் ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக கண்காட்சிக்கு பணியாற்றி குழுவினரை கண்காட்சி சேர்மன் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் பொன்னடை அணிவித்து கௌரவிக்கிறார்.

# 5000 சதுரடி வரை தொழிற்சாலைக்கு சுயசான்றில் கட்டட அனுமதி பெறலாம்

Part III - Section I(a)
(G.O. Ms.No.153, Housing and Urban Development (UD4(1)). 7th October 2025

தமிழகத்தில் 5000 சதுரடி வரையிலான தொழிற்சாலைகளுக்கு, சுயசான்று முறையில் கட்டட அனுமதி வழங்குவதற்கான அரசாணையை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை வெளியிட்டுள்ளது.

தற்போது, 2500 சதுரடி வரையிலான மனையில், 3500 சதுரடி பரப்பளவுக்கு வீடு கட்ட, சுயசான்று முறையில் கட்டட அனுமதி வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2024 ஜுலையில் துவங்கப்பட்டது. இதற்கு மக்களிடம் அதிக வரவேற்பு கிடைத்து உள்ளது. தற்போது வரை இத்திட்டத்தில் 1.50 லட்சத்துக்கும் மேற்பட்டோர், கட்டட அனுமதி பெற்று உள்ளனர். இதனால், உள்ளாட்சி அமைப்புகளின் அலைக்கழிப்பில் சிக்காமல், எளிய முறையில் அதிகமானோர் கட்டட அனுமதி பெற்றுள்ளனர்.

இதன் அடுத்தகட்டமாக, 5000 சதுரடி வரையிலான, சிறிய மற்றும் பசுமை வகை தொழிற்சாலை கட்டடங்களுக்கு, சுயசான்று முறையில் கட்டட அனுமதி வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது.

இது தொடர்பாக, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலர் காகர்லா உஷா வெளியிட்டுள்ள அரசாணையில்,

ஒவ்வொரு தொழிலும், அது வெளியேற்றும் மாசு அளவு அடிப்படையில், பச்சை, வெள்ளை, ஆரஞ்சு, சிவப்பு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதில், குறைந்த அளவு மாசு ஏற்படுத்தும் தொழில்கள், பச்சை வகையிலும், அறவே மாசு ஏற்படுத்தாத தொழில்கள் வெள்ளை வகையிலும் உள்ளன.

தமிழகத்தில் 7500 சதுரடி மனையில், 5000 சதுரடி வரையிலான பசுமை மற்றும் வெள்ளை வகை தொழிற்சாலைகளுக்கான கட்டடங்கள் கட்ட, சுயசான்று முறையில் ஒப்புதல் வழங்கப்படும். இதில் கட்டடத்தின் அதிகபட்ச உயரம், 32 அடி வரை இருக்கலாம்.

இந்த கட்டடங்களில், 1500 சதுரடிக்கு ஒன்று என்ற கணக்கில் கார் நிறுத்துமிடமும், 750 சதுரடிக்கு ஒன்று என்ற கணக்கில், மோட்டார் சைக்கிள் நிறுத்துமிடமும் ஒதுக்குவது கட்டாயம்.

நீர்ப்பிடிப்பு பகுதி, கடலோர பகுதிகள், மலைப்பகுதிகள் போன்ற தடை செய்யப்பட்ட இடங்களில் தவிர்த்து, சுயசான்று கட்டட அனுமதி பெறலாம்.

நிலத்தின் புகைப்படம், சுய சான்றிடப்பட்ட நில உரிமை ஆவணம், பட்டா, நில அளவை வரைபடம், பொறியாளர் சான்றிட்ட கட்டட வரைபடம் ஆகிய ஆவணங்களை அளிக்க வேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில், 22 அடி அகல சாலை, ஊராட்சிகளில் 19 அடி அகல சாலையை ஒட்டி அமைத்துள்ள மனைகளுக்கு இது பொருந்தும்.

இதில் வழங்கப்படும் திட்ட அனுமதி, மூன்று ஆண்டுகள் செல்லுபடியாகும். இவ்வாறு சுயசான்று அனுமதி பெறுவதில், தவறான ஆவணங்கள் இணைக்கப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டால் அனுமதி ரத்து செய்யப்படுவதுடன், சம்பந்தப்பட்டவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதே போன்று, ஊராட்சி பகுதிகளில் பசுமை மற்றும் வெள்ளை வகை தொழிற்சாலைகளுக்கான கட்டடங்கள் கட்டும்போது, சாலை அகலம் தொடர்பான விதிகள் தளர்த்தப்பட்டு உள்ளன.

பொது கட்டட விதிகளில், இதற்கான திருத்தங்கள் அடிப்படையில், ஊராட்சிகளில், தொழிற்சாலை கட்டடங்களுக்கு இதுவரை, 22 அடி அகல சாலை இருப்பது கட்டாயம் என்று இருந்தது. இது தற்போது, 19 அடியாக குறைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால், இந்த இரண்டு வகையில் உட்படும், 677 தொழில்களுக்கான கட்டடங்கள் கட்டுவோர் பயன் பெறுவர்.

THE TABLE

| S.No. | Description | Category of Industries | | |
|---|---|---|---|---|
| | | White Industries | Green Industries | |
| (1) | (2) | (3) | (4) | |
| A. | Minimum Road Width | | | |
| | Corporation/ Municipality/ Town Panchayat | 7m | 7m | |
| | Peri-Urban Village Panchayat | 6m | 6m | |
| B. | Maximum Height | 10m | 10m | |
| C. | Normally Permissible FSI | 2 | 2 | |
| D. | Minimum Setback | | | |
| | i. Front Setback | 1.5m | Abutting road width | Front Setback |
| | | | Upto 9m | 1.5m |
| | | | 9m to 18m | 3.0m |
| | | | 18m to 30.5m | 4.5m |
| | | | Above 30.5m | 6.0m |
| | ii. Side Setback | 1.5m | 2.0m | |
| | iii. Rear Setback | Nil | 2.0m | |
| E. | No restriction on Plot Coverage | | | |
| F. | Structures permissible in the minimum prescribed Front set back, Side setback and Rear set back are prescribed in rule 28. In addition, incidental structures, such as gate pillars, servant rooms, watch man booths, cycle stands and toilets with heights not exceeding 4.0 meters are permissible in these minimum prescribed setback spaces. Provided that such structures do not occupy more than one-third of the length of any one side of the site. | | | |
| G. | Parking spaces shall be provided within the site conforming to standards prescribed in Annexure - IV. | | | |
| H. | Rainwater harvesting provisions as prescribed in Annexure - XXII. | | | |

நம் சமூக மக்கள் ஈடுபட்டுள்ள பல்வேறு தொழில்களில் சிலவற்றை அதற்கான நிற வகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தகவலுக்கு ஸௌ. சேம்பர் அலுவலகத்தில் தொடர்புகொண்டு உங்கள் தொழில் வகையை தெரிந்துகொள்ளலாம்.

**White Industries**
Assembly of Bicycles
Fly ash bricks / block Mfg.
Handloom/Carpet Weaving
Cotton Belts/Tapes
Mfg. Garments
IT Industry (20 employees)
etc.

**Green Industries**
Ayurvedic & Homeopathy Medi.
Bakery/Sweet Products
Cardboard/Corrugated Box/Paper
Power looms
Mfg. Garments
Polythene and Plastic Processed Products
etc.

# சமாதான் திட்டத்தை எப்படி அணுகுவது மார்ச் 31க்குள் செய்ய வேண்டியது என்ன?

இந்தியாவில் ஜிஎஸ்டி செய்யப்பட்ட 2017-18ம் நிதயாண்டு, 2018-19 மற்றும் 2019-20ம் நிதியாண்டுகளில், ஜிஎஸ்டி படிவங்கள் தாக்கல் செய்வதில், லட்சக்கணக்கான வணிகர்கள் தடுமாறினர். புதிய படிவங்களைப் புரிந்துகொள்ளவே கால அவகாசம் தேவைப்பட்டது. இதனால், பல ஆயிரக் கணக்கான வணிகர்கள், தெரியாமல் செய்த தவறுகளால், அரசுக்கான வரி நிலுவைத் தொகையை செலுத்தாமல் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த வரித் தொகை மீது வட்டி, அபராதம் விதிக்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு தரப்பில் இருந்து எழுந்த கோரிக்கைகள் அடிப்படையில், சமாதான் திட்டத்தை ஜிஎஸ்டி கவுன்சில் அறிவித்தது. இதன்படி, வரும் 31ம் தேதிக்குள், மேற்கண்ட 3 ஆண்டுகளின் வரி, நிலுவைத் தொகையை அபராதம், வட்டியின்றி கட்டுவதற்கு ஜிஎஸ்டி கவுன்சில் வழி செய்தள்ளது. இந்த வாய்ப்பை வணிகர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

முன்னதாக, நீங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை எவ்வளவாக இருந்தாலும், அதை தாமதமின்றி செலுத்திவிடுங்கள். இதற்கான படிவங்கள் எல்லாம் இப்போது வந்துவிட்டது. அரசுக்கான வரியை செலுத்தி, 90 நாட்களுக்குள் (ஜுன் 30) SPL 02 என்ற படிவத்தை வணிகர்கள் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்தப் படிவத்தின் அடிப்படையில் வணிகர்கள் செலுத்திய வரித்தொகை ஆவணங்களை சரிபார்த்து, ஜிஎஸ்டி அதிகாரிகள் ஒப்புதல் வழங்குவார்கள். ஆனால், இந்த சமாதான் திட்டத்துக்குள் வணிகர்கள் செல்லும் முன்னர் வரி தொடர்பாக தாங்கள் ஏதாவது மேல்முறையீடுகள் செய்திருந்தால், அவற்றை வாபஸ் பெற வேண்டும்.

அபராதம், வட்டி விதிப்புத்தொடர்பாக ஜிஎஸ்டி நிர்வாகத்தின் நோட்டீசை எதிர்த்து, கோர்ட்களில் மனு தாக்கல் செய்திருந்தால், அந்த மனுக்களை திரும்பப் பெறுவதாக கூறி, ஒரு மனு தாக்கல் செய்து, அந்த மனுவுக்கு கோர்ட்டில் வழங்கப்பட்ட எண்ணைக் குறிப்பிட்டாலும் போதுமானது. சமாதான் திட்டத்துக்குள் போகலாம். காரணம், மனு மீது தீர்ப்பு கிடைக்க நாளாகலாம். அதனால், அந்த மனு மீதான எண்ணை குறிப்பிட்டால் போதுமானது.

மாறாக, ஜிஎஸ்டி துறையிடமே மேல்முறையீடு செய்திருந்தால், மேற்படி மனு தொடர்பான விபரங்களைக் குறிப்பிட்டு, அதை வாபஸ் பெறுவதாக தெரிவித்தால் போதுமானது. அதிகாரிகளே உரிய நடைமுறைகளை பின்பற்றி, அந்த மனுக்களை தள்ளுபடி செய்வதுடன், வரி பைல்களை சரி செய்துவிடுவார்கள். எனவே, வணிகர்கள் இந்த வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்திக்கொண்டு, அபராதம், வட்டியின்றி வரி நிலுவைத் தொகைகளை செலுத்திடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

# Advisory for Simplified GST Registration Scheme

In pursuance of Rule 14A of the Central Goods and Services Tax (CGST) Rules, 2017, a Simplified GST Registration Scheme has been introduced to reduce the compliance burden and enhance the ease of doing business for small taxpayers.

As per Rule 14A (Option for taxpayers having a monthly output tax liability below the prescribed threshold limit), any person who, on his own assessment, feels that his total output tax liability on the supply of goods or services, or both, to registered persons will not exceed Rs.2.5 lakh per month (including CGST, SGST/UTGST, IGST, and Compensation Cess) shall be eligible to register under this scheme. However, a person registered under this rule in a State or Union Territory shall not be eligible to obtain another registration in the same State or Union Territory under this rule against the same PAN.

**Key Features Implemented on the GST Portal:**

- While applying for registration in FORM GST REG-01, applicants should select "Yes" under the "Option for Registration under Rule 14A."
- Aadhaar authentication is mandatory for the Primary Authorized Signatory and at least one Promoter/Partner.
- Registration shall be granted electronically within three working days from the date of generation of the Application Reference Number (ARN), subject to successful Aadhaar authentication.
- Taxpayers opting for registration under Rule 14A are advised to take note of the following conditions, in case they intend to withdraw from the Scheme at a later stage
- All returns due from the effective date of registration up to the date of filing the withdrawal application must be filed.

The taxpayer must have filed:

(a) Returns for a period of minimum three months, if applying for withdrawal before 1st April 2026, or

(b) Returns for a period of minimum one tax period, if applying for withdrawal on or after 1st April 2026.

- No amendment or cancellation application for registration availed under rule 14A should be pending.
- No proceedings under Section 29 (cancellation of registration) for registration availed under rule 14A should be initiated or pending.

## சிறு, குறு நிறுவன நிலுவை தொகை தாமதமின்றி கிடைக்க இணையதளம்

சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களிடம் பொருட்களை வாங்கிய பெரிய நிறுவனங்கள் பணம் தராமல் தாமதம் செய்தால், அதை விரைவாக பெற்றுத் தர மத்திய அரசின் ஆன்லைன் டிஸ்பியூட் போர்ட்டல் உதவுகிறது.

தமிழகத்தில் உள்ள சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் எழுதுபொருட்கள், வாகன உதிரி பாகங்கள், ஜவுளி, எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் உட்பட பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்கின்றன. அவற்றிடம் இருந்து பொருட்களை வாங்கும் பல பெரிய நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், குறித்த காலத்திற்குள் பணம் தருவதில்லை.

இதனால், மூலப்பொருட்களை வாங்கவும், வங்கி கடனை அடைக்கவும் முடியாமல் சிறு, குறுந்தொழில் நிறுவனங்கள் சிரமப்படுகின்றன. இவ்வாறு பாதிக்கப்படும் நிறுவனங்களுக்கு, மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில் துறையின், **odr.msme.gov.in** தளத்தின் வாயிலாக விரைவாக பணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தமிழகத்தில் பெரிய நிறுவனங்களிடம் இருந்து, 45 நாட்களுக்கு மேல் பணம் வராமல் பாதிக்கப்படும் நிறுவனங்கள், சென்னை, கோவை, திருச்சி, மதுரை, தூத்துக்குடியில் உள்ள வசதியாக்கல் கவுன்சிலில் புகார் அளிக்கலாம்.

இதன் தலைவரான தொழில் வணிக ஆணையர் விசாரணை நடத்தி, தாமதமான பணத்தை வட்டியுடன் வசூலித்துத் தர நடவடிக்கை எடுப்பார்.

பணம் கிடைக்காமல் பாதிக்கப்படும் நிறுவனங்கள், கவுன்சிலில் புகார் அளிக்க, 45 நாட்களுக்கு மேல் காத்திருக்காமல், மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில் துறையின் ஓ.டி.ஆர்., போர்ட்டலில் ஆவணங்களை சமர்ப்பித்தால், விரைவாக பணம் பெற்றுத் தரப்படும்.

## ஜிஎஸ்டி குறைப்பால் வளர்ச்சி கண்ட உற்பத்தித் துறை

ஜிஎஸ்டி வரிகள் குறைக்கப்பட்டதால் இந்திய உற்பத்தித் துறை கடந்த அக்டோபர் மாதத்தில் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இதுகுறித்து ஆய்வு நிறுவனமான ஹெச்எஸ்பிசி இந்தியா வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உற்பத்தித் துறை நடவடிக்கைகளுக்கான குறியீட்டு எண்ணான பிஎம்ஐ, கடந்;த அக்டோபரில் 55.5 ஆக இருந்தது. அது முந்தைய 8 மாதங்கள் காணாத குறைந்தபட்ச பிஎம்ஐ எண்ணாகும். பின்னர் அது கடந்த நவம்பரில் 56ஆக அதிகரித்தது. பின்னர் டிசம்பரில் 18 மாதங்களில் இல்லாத குறைந்தபட்சமாக பிஎம்ஐ 54.5 ஆக சரிந்தது. ஜனவரில் 56.5 ஆகவும், பிப்ரவரியில் 56.9 ஆகவும் அதிகரித்த பிஎம்ஐ, மார்ச் மாதத்தில் 56.4 ஆக இருந்தது. அதைத்தொடர்ந்து, அது கடந்த ஏப்ரலில் 58.2 ஆக அதிகரித்து, பின்னர் மே மாதத்தில் அது 57.6 ஆகச் சரிந்தது. பின்னர் ஜூனில் முந்தைய 14 மாதங்கள் காணாத அளவுக்கு 58.4 ஆக அதிகரித்த பிஎம்ஐ, ஜூலையில் 59.1ஆக உயர்ந்தது.

பின்னர் கடந்த ஆகஸ்டில் 15 ஆண்டுகள் காணாத அதிகபட்சமாக பிஎம்ஐ 62.9 ஆக உயர்ந்தது. அதைத் தொடர்ந்து, செப்டம்பரில் அது 57.7ஆக சரிந்தது.

இந்த நிலையில், உற்பத்தித் துறை நடவடிக்கைகளுக்கான பிஎம்ஐ குறியீட்டு எண் கடந்த அக்டோபர் மாதத்தில் மீண்டும் எழுச்சி பெற்று 59.2 ஆகப் பதிவாகியுள்ளது. குறைக்கப்பட்ட புதிய ஜிஎஸ்டி விகிதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது இந்த வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிகத்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் தொடர்ந்து 42ஆவது மாதமாக உற்பத்தித் துறையின் பிஎம்ஐ குறியீட்டு எண் நடுநிலை வரம்பான 50க்கும் மேலே உள்ளது. அந்தக் குறியீட்டு எண் 50க்கு மேல் இருந்தால் உற்பத்தித் துறையின் ஆரோக்கியமான போக்கையும் 50க்கும் குறைவாக இருந்தால் பின்னடைவையும் குறிக்கிறது.

## விரைவில் நிகழ இருக்கும் விஷயங்கள்

- நிதி செயல்திறனை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகளை இணைப்பதற்கான புதிய திட்டத்தை உருவாக்கி வருகிறது. பாரத ஸ்டேட் வங்கிக்குப் பிறகு இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கி பாங்க் ஆப் இந்தியாவுடன் யூனியன் பாங்க் ஆப் இந்தியாவையும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியையும் இணைப்பது குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. பஞ்சாப்&சிந்த வங்கி மற்றும் மகாராஷ்ட்ரா வங்கி போன்ற சிறிய வங்கிகள் தனியார் மயமாக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.
- யூடியூப் தற்போது சூப்பர் அப்டேட் ஒன்றை கொண்டுவர இருக்கிறது. அதாவது, யூடியூப்பில் உள்ள பழைய தரம் குறைந்த வீடியோக்களை ஏஐ மூலமாக ஆட்டோமேட்டிக்காக உயர்தர HD வீடியோக்களாக மாற்றிக்கொள்ளும் வசதியை இந்நிறுவனம் கொண்டு வர உள்ளது. 4K, HD, Ultra HD வரைக்கும் AI மூலமாக வீடியோக்களின் தரத்தை உயர்த்தலாம். செட்டிங்ஸ்-ல் உள்ள சூப்பர் ரெசல்யூஷன் என்ற ஆப்ஷனை தேர்வு செய்து ஒப்புதல் தெரிவித்தால் உயர்த்திக் கொடுக்கும் என்று கூறப்படுகிறது.
- ஆதார்-ல் திருத்தம் செய்ய நினைப்பவர்கள் ஆதார் மையங்களுக்கு சென்று கால விரயம் ஏற்படுவதைக் குறைக்க புதிய திருத்தம் கொண்டு வர உள்ளது. அதன்படி, ஆதாரை டிஜிட்டல் மயமாக்கும் முயற்சியாக, E-Aadhaar App எனப்படும் புதிய செயலி அறிமுகமாகவுள்ளது. இதனை வீட்டிலிருந்தபடியே திருத்த முடியும். பிறந்த தேதி, பெயர், பெயர்களில் எழுத்துப்பிழை, முகவரி, மொபைல் எண் போன்ற முக்கிய விவரங்கள் இனி ஆதார் மையத்திற்குச் செல்லாமல் மொபைல் ஆப் மூலமாகவே புதுப்பிக்க முடியும். இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த வசதி அறிமுகம் ஆகும் எனத் தெரிகிறது.
- தங்க நகைகளை வங்கிகளில் ஈடு (அடகு) வைத்து தங்க நகைக் கடன் பெறுவது போல, வெள்ளி நகைகளையும் இனி வங்கிகளில் வைத்துக் கடன் பெறலாம் என இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. இந்த நடைமுறை வரும் 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அமலுக்கு வருகிறது. வெள்ளி நாணயங்கள், நகைகளை மட்டுமே வைத்து கடன் பெற முடியும். வெள்ளிக் கட்டிகள், வெள்ளி முதலீடுகளுக்கு நிகராகக் கடன் பெற முடியாது.

# ஜிஎஸ்டி சர்வே வந்தால் என்ன செய்ய வேண்டும்?

வியாபாரி ஒருவரின் நிறுவனத்தில் திடீரென ஜிஎஸ்டி அதிகாரிகள் சர்வேக்கு வருகிறார்கள். அவர்கள் உங்கள் Stock book, Purchase Register, Outward Sales, Godown details எல்லாவற்றையும் பார்க்க ஆரம்பிப்பார்கள். அப்போது அவர்கள் சொல்லலாம். உங்களுடைய Stock Records சரியாக இல்லை. Physical stock match ஆகவில்லை. என்று.

நீங்களும் நானும் அறிவோம், Stock maintain பண்ணுவது ஒரு சின்ன விஷயம் இல்லை. தினசரி Inward, Outward entries, Wastage, Valuation, Price Fluctuation எல்லாவற்றையும் சரியாக கண்காணிப்பது நடைமுறைக்கு மிகவும் கடினம். சில Calculation difference அல்லது Valuation mismatches வருவது மிகவும் சாதாரணம் தான். ஆனால் இப்போ கேள்வி என்னவென்றால், இதுபோன்ற சரக்கு Stock differences இருந்தால் ஜிஎஸ்டி அதிகாரி Section 130 படி உங்கள் Stock-ஐ Confiscate அதவாது கைப்பற்றலாமா?...

Section 130 என்பது ஒரு மிகக் கடுமையான Section இது Confiscation of Goods பற்றியது. இதை apply செய்ய வேண்டும் என்றால் ஒரு மோசடி நோக்கம் இருக்க வேண்டும். வரி ஏய்ப்பு செய்ய வேண்டும் அல்லது Taxable Goods-ஐ மறைத்திருக்க வேண்டும். அதாவது, ஒரு உண்மையான Criminal intention இருந்தால் தான் Section 130-க்கு இடமிருக்கும். ஆனால், Stock Valuation difference அல்லது Ordinance Mismatch இருந்தால் இதை Section 130 மூலம் Confiscate செய்ய முடியாது.

இப்போது இதே மாதிரியான ஒரு உண்மை சம்பவம் Dayal Kodak என்ற நிறுவனத்திற்கு நடந்தது. அந்த Case-ல் GST department Survey நடத்தி Stock verification செய்தது. அதில் சில mismatch இருந்தது. அதையடுத்து Officer section 130 apply செய்து சரக்கைக் கைப்பற்றினார். ஆனால் Assessee இதை எதிர்கொண்டு அலகாபாத உயர்நீதிமன்றத்தை அணுகினார். நீதிமன்றம், Mere stock difference இருந்ததுக்காக Section 130 apply பண்ண முடியாது. இது Tax determination issue என்று தீர்ப்பு வழங்கியது. பிறகு உச்சநீதிமன்றத்திற்கு வழக்கு சென்றது. அங்கும் அதே தீர்ப்பு வழங்கப்பட்டது.

உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகக் கூறியது, Stocks records mismatch or valuation difference இருந்தாலும், அது Fraud என்று சொல்ல முடியாது. Officer Section 130 apply செய்து சரக்கைக் கைப்பற்றகூடாது. இப்படிப்பட்ட சூழலில் Section 73 அல்லது Section 74 கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியது.

Section 73 என்பது Genuin mistakes, Clerical errors, Calculation Mistakes போன்றவற்றுக்கு, அதாவது Taxpayers யிடமிருந்து எந்த Fraudulent Intention-ம் இல்லாத போது. Section 74 என்பது Fraudulent Intention இருந்தால், அதாவது Tax evade செய்ய முயற்சி இருந்தால்.

ஆக, அதிகாரிக்கு சரக்கு இருப்பில் பிரச்சனை இருப்பது தெரிந்தால், அவர் 73 அல்லது 74 படி Show cause notice அனுப்பி, சான்றின் அடிப்படையில் Tax determaine செய்ய வேண்டும். ஆனால் Section 130 apply செய்து Goods confiscate செய்யக்கூடாது.

நடைமுறையில் நினைத்துப் பாருங்கள், Stock maintanance-ல் எப்போதும் சில சிறு வித்தியாசம் வரும். ஆனால், அதனாலே ஒரு நேர்மையான வணிகருக்கு சரக்கைக் கைப்பற்றும் தண்டனை கொடுக்கக்கூடாது என்பது தான் இந்த நீதிமன்ற தீர்ப்பின் முக்கியமான நோக்கம்.

இதுபோன்ற சிறிய சட்ட விழிப்புணர்வு இருந்தாலே பெரிய பிரச்சனைகளில் சிக்காமல் இருக்கலாம். ஒரு தொழில்முனைவோருக்கு வணிகத்தில் திறன் இருப்பது போல, அடிப்படைச் சட்டததை தெரிந்துகொள்வதும் முக்கியம். ஆய்வுக்கு வரும் ஜிஎஸ்டி அதிகாரி எந்த அதிகாரமிக்கவர், எந்த Section எந்த சூழலில் apply ஆகும் என்பதை தெரிந்திருப்பது நம்மை தேவையில்லாத பிரச்சனையிலிருந்து காப்பாற்றும்.

சிறிய விஷயம் போலத் தோன்றினாலும், இப்படியான அடிப்படைச்சட்டத்தைப் புரிந்துகொள்வது தொழில் பாதுகாப்புக் கவசம் போலத்தான். அடுத்தமுறை ஆய்வுக்கு வந்தாலும் நீங்கள் சட்டப்படி உறுதியாக பேசலாம். ஜிஎஸ்டியில் உள்ள Section 130, Sec. 73 & Sec. 74 பற்றிய தெளிவு இருந்தால், உங்கள் நிதியிழப்பு குறையலாம்.

## ஜிஎஸ்டி - சில தகவல்கள்

★ GST-9 Filing-க்கு புதிய வசதிகள்: GST Portal-ல் இப்போது முழு வருடத்திற்கான GSTR-1, 1A, IFF, 3B Summary, 8A ITC details மற்றும் HSN-wise data-வை Excel-ல் Download செய்யலாம்.

★ System Computed Summary : Portal System - Calculated GSTR-9 summary-யை PDF மற்றும் Excel Format-ல் தருகிறது. இதை Verify செய்து Reconcillation செய்யலாம்.

★ முக்கிய தேதிகள்: FY 2024-25-க்கான GSTR-9 filing date 31 December 2025; Corrections மற்றும் ITC Claim செய்ய கடைசி தேதி 30 நவம்பர் 2025.

★ Reconciliation Importance: GSTR-1, 3B மற்றும் 2B Data-வை Excel formulas மூலம் Cross-Check. செய்து Mismatch identify பண்ணலாம்.

★ குறித்த நேரத்தில் செய்யாவிட்டால் நஷ்டம்: நவம்பர் 30க்குள் ITC Claim செய்யவில்லை என்றால் அது Lapse ஆகும். இதனால் லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்படலாம்.

# RTGS / NEFT / IMPS

## பணத்தை அனுப்புவதில் எந்த முறை சிறந்தது?

ஒருவர் அடிக்கடி பணப் பரிமாற்றம் செய்கிறார் என்றால், ஒவ்வொரு முறையும் அவர் பரிமாற்றம் செய்யும் போது, எந்த விருப்பத்தைத் தேர்வு செய்வது என்று அவர் குழப்பமடைய வாய்ப்புள்ளது. இந்த நிலையில், இந்தியாவில் பணப் பரிமாற்றத்திற்கான பிரபலமான சில விருப்பங்கள் உள்ளன. அதன்படி, பாதுகாப்பான மற்றும் உங்களுக்கு வசதியான ஒரு முறையைத் தேர்ந்தெடுப்பது நல்லது. அந்த வகையில், RTGS, NEFT மற்றும் IMPS ஆகியவை விரைவாகவும் பாதுகாப்பாகவும் பணப் பரிமாற்றத்தை அனுமதிக்கும் மின்னணு கட்டண முறைகள் ஆகும்.

### நிகழ் நேர மொத்த தீர்வு – Real Time Gross Settlement (RTGS):

RTGS என்பது உடனடி தீர்வு தேவைப்படும் பெரிய மதிப்பு பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு கட்டண முறையாகும். இது நிதி பரிமாற்றத்திற்கான பாதுகாப்பான அமைப்பாகும். RTGS பரிமாற்றத்திற்கான குறைந்தபட்ச தொகை பொதுவாக ரூ. 2 லட்சம் ஆகும். இது ரியல்டைம் அடிப்படையில் செயல்படுகிறது. மேலும் இந்தப் பரிவர்த்தனை உடனடியாக முடிக்கப்படும். அதன்படி, வேலை நாட்களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை RTGS இடமாற்றங்கள் கிடைக்கும். பரிவர்த்தனை கட்டணங்களை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கலாம். ஆனால் அது ரிசர்வ் வங்கியால் வரம்பிடப்பட்டுள்ளது.

### தேசிய மின்னணு நிதி பிரமாற்றம் – National Electronic Funds Trasnfer (NEFT)

NEFT என்பது இந்தியாவில் உள்ள வங்கிகளுக்கு இடையே பணப் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தப்படும் மின்னணுக் கட்டண முறை. இது ஒத்திவைக்கப்பட்ட நிகர தீர்வு அடிப்படையில் செயல்படுகிறது. அதாவது பகலில் குறிப்பிட்ட நேரங்களில் பரிவர்த்தனைகள் செய்ய வழிவகை செய்யப்படுகிறது. அதேபோல், NEFT பரிமாற்றங்களுக்கு குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்பு இல்லை. மேலும் இந்தப் பரிவர்த்தனை 24×7 செயல்படும். NEFT மூலம் பணத்தை மாற்றுவதற்கு வாடிக்கையாளர்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஆன்லைன் NEFT பரிவர்த்தனைகளுக்கு சேமிப்பு வங்கி கணக்கு வாடிக்கையாளர்களுக்கு கட்டணம் ஏதும் இல்லை. நிதி பரிமாற்றம் தவிர, கிரெடிட் கார்டு நிலுவைத் தொகையை செலுத்துதல், கடன் EMI செலுத்துதல், உள்நோக்கி அந்நிய செலாவணி பணம் செலுத்துதல் போன்ற பல்வேறு பரிவர்த்தனைகளுக்கு NEFT பயன்படுத்தப்படலாம்.

### உடனடி கட்டண சேவை – Immediate Payment Service (IMPS):

IMPS என்பது உடனடி பணம் செலுத்தும் முறையாகும். இது இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (NPCI) வழங்கும் உடனடி வங்கிகளுக்கு இடையேயான மின்னணு நிதி பரிமாற்ற சேவையாகும். மொபைல் போன்கள், இன்டர்நெட் பேங்கிங் அல்லது ஏடிஎம்களைப் பயன்படுத்தி வங்கிக் கணக்குகளுக்கு இடையே நிகழ்நேர பணப் பரிமாற்றங்களைச் செய்ய வாடிக்கையாளர்களுக்கு இது உதவுகிறது. விடுமுறை நாட்கள் உட்பட எந்த நேரத்திலும் பணத்தை மாற்ற இதைப் பயன்படுத்தலாம். பரிவர்த்தனைகள் நிகழ்நேரத்தில் செயல்படுத்தப்பட்டு, பயனாளியின் கணக்கில் உடனடியாக வரவு வைக்கப்படும். IMPS பரிமாற்றங்களுக்கு குறைந்தபட்ச அல்லது அதிகபட்ச வரம்பு இல்லை.

# உடனடி இ-பான் கார்டு

பான் கார்டு பெற இரண்டு வாரங்கள் ஆகும். சில சமயங்களில் கார்டு விண்ணப்பித்து, செயலாக்கப்பட்டு உங்கள் வீட்டிற்கு நேரடியாக டெலிவரி செய்ய ஒரு மாதம் வரை ஆகும்.

ஆனால் e-PAN (Electronic PAN Card) இரண்டே நிமிடங்களில் ஆன்லைனில் பெறலாம். உங்களுக்குத் தேவையானது உங்கள் ஆதார் அட்டை எண் மட்டுமே. அதை KYC ஆக எடுத்துக்கொண்டால். வருமான வரித்துறை இ-பான் எண்ணை ஒரு சிட்டிகையில் வழங்கும். இதை PDF ஆக பதிவிறக்கம் செய்யலாம்.

வழக்கமான பான் கார்டைப் போலவே, இது அசல் பான் கார்டு போலவே இருக்கும். இ-பான் கார்டுக்கு ஒரு ரூபாய் கூட செலுத்தத் தேவையில்லை. எல்லாம் இலவசம். செயல்முறையும் வேகமாக இருக்கும்.

இந்த டிஜிட்டல் பான் கார்டை பெற பான் இணையதளத்தில் சென்று இடதுபுறத்தில் தோன்றும் ஆப்ஷன்களில் உள்ள Instant E-PAN பட்டனை தேர்வு செய்து, அதில், ஆதார் எண்ணை உள்ளிட்டு, சரியான அலைபேசி எண்ணை இணைத்து ஓடிபி மூலம் இந்த e-PAN கார்டை எளிமையாக இரண்டே நமிடத்தில் பெறலாம்.

பான் கார்டு இல்லாதவர்கள், புதிதாக எடுக்க இருப்பவர்கள் அவசரமாக பான் கார்டு தேவைப்படும்போது இ-பான் பெறுவதே சிறந்த வழி.எனவே உடனடியாக பயன்படுத்தலாம்.



# India gets one-year Free ChatGPTGo

ChatGPT Go's 12-monthfree access rollout in India on Tuesday witnessed significant user interest, but many reported difficulties activating the offer using their UPI credentials.

OpenAI introduced a12-month, no-cost ChatGPTGo plan for Indian users, beginning 4 November 2025,as part of a limited-time promotion. However, several users took to X (formerly Twitter) to complain about unsuccessful activation attempts.

Common grievances include repeated approvals of a ₹1 UPI debit without activation, applications getting stuck on the payment screen and ongoing errors relating to valid UPI IDs and incomplete mandates, even when the payment authorization appears tobe successful.

According to OpenAI,enrolling in the ChatGPT Go free access offer requires adding a payment method (eithera credit card or UPI), despite the absence of any subscription fee.It mandates a temporary charge of ₹1 at every billing cycle, which is immediately refunded.The setup is designed toenable automatic billing forChatGPT Go after the12-month free promotion expires. Users are reminded that cancelling the subscription during the free period renders the offer void for that account.

"Excited for free ChatGPTGo in India, but UPI verification stuck! Invalid VPA error despite valid ID like myname@phonepe. Mandate not completing. Please fix UPI support ASAP!" a user wrote on X.

"I am facing the ChatGPTGo subscription payment issue using the UPI method. Even after confirming the upipayment it is stuck at the approved payment screen. Any fix or is it a bug ?" another said.

"Tried activating the newChatGPT Go 12-month free offer today—but even after approving payment twice (Re1 each time via UPI), the plan didn't activate. The pages hows Rs 0.00 total due, but still no access to ChatGPT Go.

Anyone else facing this issue? @OpenAI, please check," a third user said. OpenAI acknowledged that UPI payments experienced a temporary disruption shortly after launch due to unexpectedly high traffic, which briefly overloaded its systems."Demand was so high it briefly overwhelmed our UPI integration. We've been working with partners to restore it quickly, and we're rolling availability back out,"OpenAI said in a statement.

# வீடு மாறியோர் வாக்காளர் பட்டியலில் இணைய என்ன செய்ய வேண்டும்?

இந்தியத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி தொடர்பாக பொது மக்களுக்கு எழுந்த சந்தேங்களுக்கு தேர்தல் ஆணைய அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

பழைய முகவரியிலிருந்து மாறி இருப்பவர்களின் வாக்குரிமை, அவர்கள் தற்போது வசிக்கும் முகவரிக்குத்தான் அமையும் என்றும், அவர்களின் 2002-ம் ஆண்டு பட்டியலில் பெயர் இருந்ததா என்பது மட்டுமே சரிபார்க்கப்படும் என்றும் அதிகாரிகள் தெளிவுபடுத்தினர். பெயர் சேர்க்க விண்ணப்பிக்கும் போது, ஆதாரங்களை கணக்கெடுப்பின்போது சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றும், வரைவு பட்டியல் வெளியான பின் 13 ஆவணங்களில் ஒன்றை கொடுத்து பட்டியலில் பெயரை சேர்த்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், விண்ணப்பப் படிவத்தில் தந்தை அல்லது பாதுகாவலரின் பெயரைப்பதிவு செய்தால் மட்டுமே போதுமானது.

2024 வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள், வாக்குச்சாவடி அலுவலரிடம் படிவம்-6 மற்றும் உறுதிமொழிப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாம். வெளிநாட்டில் இருப்பவர்களின் படிவங்களை அவர்களின் குடும்பத்தார் பூர்த்தி செய்து தரலாம் என்றும், விரைவில் ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கும் வசதி வழங்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் உறுதி செய்துள்ளது.

## மருத்துவ தகவல்

**குளுகோசமின் மாத்திரைகளால் சர்க்கரை நோய் வருமா?**

மூட்டுத் தேய்மானத்திற்கு கொடுக்கப்படும் மாத்திரைகள் மூட்டுகளின் ஜவ்விற்கு ஆகாரம் போன்றது. இதன் பயன்கள் முழுமையாக உறுதி செய்யப்படவில்லை. ஆனால் பக்க விளைவுகள் மிகக் குறைவு என்பதால் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த மருந்தால் சர்க்கரை நோய் வருவது மிக அரிது.


– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை & வேல் சிறப்பு எழும்பியல் மையம்

**கால்சியம் நிறைந்த உணவுப் பொருட்கள்:** எலும்புகளுக்கு பலம் கால்சியம். பாலில் கால்சியம் இருப்பதைத் தவிர, ராகியில், 100 கிராம் அளவில் 344மி.கி. கால்சியம் உள்ளது. கொள்ளுவில் 100கிராமிற்கு 287 மி.கி. கால்சியம் உள்ளது. கருவேப்பிலையில் 100 கிராமிற்கு 830 மி.கி. கால்சியம் உள்ளது. இது முடிவளர்ச்சி, நரம்பு வலிமை, முகப்பொலிவைத் தருகிறது. முருங்கைக்கீரையில் 100 கிராமிற்கு 400 மி.கி. கால்சியம் உள்ளது. கருப்பு கொள்ளுவில் 100கிராமிற்கு 975 மி.கி. கால்சியம் உள்ளது.




# சௌராஷ்ட்ரர்களின் அரசியல்

## பிரதிநிதித்துவம் – மறக்கப்பட்டதா? மறுக்கப்பட்டதா?



தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்து வந்தவர்களில், தொன்மையானவர்களும், மென்மையானவர்களும் சௌராஷ்ட்ரர்கள் என்பது சொற்களால் மட்டுமல்ல செயல்களாலும் ஆன்றோர்கள் கண்டுணர்ந்த நிதர்சனம் ஆகும்.

தங்களது பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கட்டிக்காத்து, தொடர்ந்து கடைப்பிடித்து வந்தாலும், தமிழர்களின் பாரம்பரியத்திலும், இரண்டறக் கலந்துவிட்ட பரந்த மனப்பான்மை கொண்ட இனம், பள்கார் இனம். தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையையும், புத்தாண்டையும், புகுந்த வீட்டு மருமகள் போல சீரும்சிறப்புமாக கொண்டாடும் அற்புதங்கள் ஆண்டாண்டு காலமாக நடந்துகொண்டிருக்கின்றன.

மதுரையில் பெருந்திரளாக கூடிவாழும் சௌராஷ்ட்ர இனம் இந்த மாநகரின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பைத் தந்திருக்கிறது. ஆன்மிகத்திற்கு நாயகி ஸ்வாமிகள், அரசாட்சிக்கு எல்.கே. துளசிராம் அவர்கள், தேச பக்திக்கு N.M.R. சுப்பராமன் அவர்கள், தொழில்துறைக்கு திருவாளர்கள் C.S. ராமாச்சாரி, K.L.N. கிருஷ்ணன் போன்றோர். இலக்கியத்திற்கு சங்குராம், பத்மநாப அய்யர் போன்ற எண்ணற்றோர், கலைத்துறையில் பக்திக்கும், ஜனரஞ்சக இசைக்கும் சேர்த்து பத்மஸ்ரீ T.M. சௌந்தரராஜன், என பன்முகத்தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது, சௌராஷ்ட்ர சமூகம்.

சென்ற நூற்றாண்டு வரை வளர்பிறையாக அரசியல் வானில் வலம் வந்த நம் இனம், இரண்டு தசாப்தங்களாக தேய்ப்பிறை என சுருங்கி 2021ல் அமாவாசை போல் கண்ணுக்கு புலப்படாமல் போய்விட்டது என்பது, வருந்தத்தக்கது.

திருவாளர்கள் T.K. ராமா தொடங்கி, N.M.R. சுப்பராம், P.K.R. லெட்சுமிகாந்தம், K.S. ராமகிருஷ்ணன், A.G. சுப்புராமன், S.K. பாலகிருஷ்ணன், A.G.S. ராம்பாபு, S.R. ராதா, O.S. அமர்நாத், S.S. சரவணன் என மதுரை அரசியலில் உன்னத இடத்தை தக்கவைத்துக் கொண்டிருந்த சமூகம், இன்று பிரதிநிதித்துவம் இல்லாமல் போனது ஏன் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகிறது.




இதற்கு, நம் மக்களின் ஆர்வமின்மை காரணமா? அல்லது சூழ்ச்சியா? என சிந்தித்து எழுச்சியுடன் எழுந்து தீர்க்கமான தீர்வுடன் வரவேண்டிய தருணம் இது. இப்போது இல்லையென்றால் எப்போதும் இல்லை. இனியும் காலந்தாழ்த்தக்கூடாது. அரசியலில் அனாதை ஆக்கப்பட்டதை. ஆர்த்தெழுந்து அப்புறப்படுத்துவோம்.

பயந்த சுபாவம் கொண்டவர்கள், பயம் காட்டிவிடலாம்; பணத்தை நீட்டினால், மடக்கிவிடலாம்; இவர்களுக்குள் ஒற்றுமை இல்லை, பிரித்தாளலாம்; என்ற குதர்க்கத்தனம் இதுவரை நம்மை அடிமைபடுத்தி வந்தது. பொறுத்தது போதும் என்ற வீரியத்துடன், சாணக்கியத்தனம் கொண்டு, மீண்டு வர வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம். இனியும் உறங்கிக்கிடந்தால் லீலாவதி அவர்களின் புனித ஆத்மா நம்மை மன்னிக்காது.

எல்.கே.டி. அவர்களின் ஆசியுடன் அரசியலில் நமது பொற்காலம் மீண்டும் உதிப்பதற்காக, டிசம்பர் 28ந் தேதி அரசியல் எழுச்சி மாநாடு நடக்கிறது. அது நம் சமூகத்திற்கு ஒரு திருப்புமுனையாக அமையட்டும். அரசியல் அங்கீகாரம் நமக்கு மறக்கப்பட்டதை நினைவுபடுத்திக் கொள்வோம். அதில் மறுக்கப்பட்ட நம் உரிமையை மறுபடியும் நிலைநிறுத்துவோம். மறைக்கப்பட்டிருந்தால், கண்டெடுத்து அரியணையேற்றுவோம்.

வெற்றி நமதே! வாழ்த்துகள்!!

– வீரஜா




விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 31 Years 2023 SvlS வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

தினசரி & கட்டிங் மாத காலண்டர் | 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர் | தமிழ் டைரி ஆங்கில டைரி | 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்

20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை | பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY | விபூதி கவர் 7 DAYS DELIVERY | சாமி படம் வுட்லேமினேசன் | ஸ்கூல் லேபிள்



நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873, 98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

உள்நாடு மற்றும் வெளிநாடு விமான டிக்கெட்ஸ் குறைந்த விலையில் வாங்க

IndiGo | Air India | spicejet | Emirates | Lufthansa

VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

காமராஜர் சாலை, மதுரை

91599 18447



STEP IN & BUY at Madurai



VILLAKKUTHOON BAZAAR

B THE BABY SHOP Alankar

Next to RAMRAJ Showroom

Just Born..
- Baby Wears
- Joblas
- Gift Dress Packs
- Quick Dry Towels
- All Baby Products & Accessories

280, Kamarajar Salai,
Villakkuthoon,
Madurai-625 009.
Cell : 98941 41402

Exclusive Showroom for U'r Branded Products

IDEAL innerwear | ANAND | Viking | Prithvi INNER WEARS | NAIDU HALL THE FAMILY STORE | JOCKEY INNER WEAR | Poomex | MANGAI NIGHTIES | RASATHE DARLING NIGHTIES | YOKE'S NIGHTY

& All Branded Innerwears for All

Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

B THE BABY SHOP அலங்கார் தி பேபி ஷாப்

உள்ளாடைகள் உலகம்

280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402

HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

Prof. Dr. M.V. SUBBURAMAN

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award

www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist

Your Name is Your Life



பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட'
முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

MANTHRALAYAM 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road
Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai

For Appointment
98421 11411

Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்






## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.
போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63
கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.
Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj
RIGID PVC PIPES, FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY
Trust us with all your Electrical Plumbing and Agri needs...







## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.
போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372
E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## VIGNESH GRAPHICS

All Kinds of Printing Solution



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.
Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.
Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.
O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

100 YEARS SRB SINCE 1901

S.S.KISHORILAL
92445 00633
0452 - 3558788

PRIDE OF MADURAI
SINCE 1901

## SRB SILKS HOUSE

Fashion Creators in Silk Sarees

402 LG Complex, K.K.Nagar, Madurai - 625 020. Opp Sundaram Park / Near UCO Bank

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.11.2025 / BPC MDU
Date of Publication 20th of Every Month

**Kuttuva Silicates (P) Ltd.,**

KSPL,Madurai

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846

Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid




**வேல் மருத்துவமனை**
**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

24hrs Service






**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY

தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்

Prakash Green Energy
Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு **78000 ரூ** அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

Premium Quality
30+ Years Warranty
100 % Guarantee

**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்

MSME
TANGEDCO

வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011



*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com